DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு. லட்சுமணக்குமார் | Father/Husband Name : முத்துச்சாமி |
| Age : 56 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23.03.2026

( Accused Present).

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது இருக்கன்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இருக்கன்குடி காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு. சசிக்குமார் என்பவரை தெரியும், அவருடைய கையெழுத்தும் எனக்கு தெரியும். அவர்கள் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து என்னால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க முடியும்.

3. கடந்த 26.09.20213 ம் தேதி காலை 08.00 மணியளவில் இருக்கன்குடி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் நிலைய பொறுப்பில் இருந்தபோது காளியப்பன் மகன் மாரியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை அதன் தன்மைகேற்ப இருக்கன்குடி காவல் நிலைய குற்ற எண் 116/2021 பிரிவுகள் 294 (b), 324, 506(2) இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (**புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

4. பின்னர் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் 26.09.2021ம் தேதி 09.15 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மதன்குமார் மற்றும் ராஜன் என்ற சண்முகவடிவேல்ராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**.

5. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் மாரியப்பன், மூக்கம்மாள், காளீஸ்வரி, காளியப்பன், சண்முகத்தாய், மதன்குமார் மற்றும் ராஜன் என்ற சண்முகவடிவேல்ராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. பின்னர் சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் 26.09.2021ம் தேதி 12.45 மணியளவில் இவ்வழக்கின் எதிரி இலட்சுமணபிரபு என்பவரை அய்யம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது செய்தபோது எதிரி எவ்வித அச்சுறுத்தலும், வலுக்கட்டாயமோ இல்லாமல் தானே முன்வந்து வழக்கு குற்றத்தை ஒப்புக்கொண்டு சாட்சிக்ள மலையப்பன் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால் நான் மாரியப்பன் என்பவரை அடிக்க பயன்படுத்திய இரும்பு பைப் இருக்கும் இடத்தை அடையாளம் காட்டி அந்த இரும்பு

பைப்பை எடுத்து தங்களிடம் ஆஜர் படுத்துவேன் என்று கூறியுள்ளார். (ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது) அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் எதிரியிடமிருந்து சுமார் 55 செ.மீ நீளமுள்ள இரும்பு பைப் ஒன்றை போலீசார் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளனர். (அத்தாட்சி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றி வழக்கு சொத்துடன் நிலையம் வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். கைப்பற்றிய வழக்கு சொத்தான 55 செ.மீ நீளம்கொண்ட இரும்பு பைப்பை படிவம் –91 மூலமாக நீதிமன்ற அனுப்பி வைத்துள்ளார். **<u>(படிவம்–91 அ.சா.ஆ. 9 ஆகவும், இரும்பு பைப் அ.சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது</u>**).

7. பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான மலையப்பன் மற்றும் ரமேஷ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு முதலுதவி சிகிச்சையளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திவ்யா மற்றும் காயம்பட்ட அ.சா.1க்கு மேல்சிகிச்சையளித்து கொடுங்காயம் என்று சான்று வழங்கிய விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் அரவிந்த்பாபு என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து காயச்சான்று பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.(சாத்தூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட அ.சா.1ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆகவும், விருதுநகர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட அ.சா.1ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). மருத்தவர் வழங்கிய காயச்சான்றில் காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் இவ்வாழக்கின் சட்டப்பிரிவான பிரிவுகள் 294 (b), 324, 506(2) இ.த.ச விலிருந்து, பிரிவுகள் 294 (b), 326, 506(2) இ.த.ச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார்.**<u>(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**).

8. பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரி மீது பிரிவுகள் 294 (b), 326, 506(2) இ.த.ச –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

9. பொய்யான புகார் மனு பெற்று, எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.